வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 2/2019

வழக்கு சாட்சி LW9 / PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டேவிட் | ஜாதி | |
| கணவர்/தந்தை | தேவதாஸ் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 44 |

தேதி 16.04.2025

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் புழல், கதிர்வேடு பகுதியில் வசித்து வருகிறேன், கடந்த 2013ல் தேதி,மாதம் ஞாபகம் இல்லை. காலை 6.30 மணியளவில் புழல் சைக்கிள்ஷாப் அருகே போலீசார் கூட்டமாக இருந்தார்கள். அருகில் சென்று பார்த்தபோது அங்கு ஒரு விபத்து ஏற்பட்டதாகவும், போலீசார் அந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான் மேற்படி பார்வை மகஜரானது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்தில் யார் ஏற்படுத்தியது, யார் இறந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் பார்க்கும்போது கூட்டமாக இருந்தது என்றால் ஆமாம். போலீசார் கேட்டுக்கொண்டதால்தான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடம் செல்லாமல் படம் வரைந்ததை பார்க்காமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னிடம் எனது பெயர், அப்பா பெயர், முகவரி மட்டும்தான் கேட்டார்கள் என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை.**